இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 329 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 25 – புதன்கிழமை 09 ஜூலை 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 329 : Thiruvalluvar Year - 2056 - Aani 25 - Wednesday 09 July 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## இன்றும் நாளையும்

# திருவாரூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் களஆய்வு!

## முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறார்!

**திருவாரூர், ஜூலை 9-**

**மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமான திருவாரூருக்கு தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் (09.07.2025) நாளையும் (10.07.2025.) அரசு முறைப் பயணமாக வருகை தருகிறார். முதல்வர் அவர்கள், நலத்திட்டப் பணிகளின் கள ஆய்வுகளையும், கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தும், அரசு கட்டிடங்கள் திறப்பு விழா, பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் விழா பேருரை ஆற்றவிருக்கிறார்.**

இந்திய துணைக்கண்டம் மட்டுமின்றி உலக நாடுகளே போற்றும் உன்னத ஆட்சி தந்து கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (09.07.2025) திருவாரூர் மாவட்டம் வருகிறார். மதியம் திருவாரூர் வந்தடையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கோட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு மரியாதை செலுத்தி, திருவாரூர் பகுதிகளில் "ரோட்ஷோ" மூலம் பொதுமக்களைச் சந்திக்கிறார்.

தமிழ் கூறும் நல்லுலகில் தமது 14 வயதில் புலிக்கொடி ஏந்தி, மொழி காக்கும் போராட்டத்தை துவக்கி தனது 92 வயது வரை "வாழ்நாள் போராளி"யாகவே வாழ்ந்து, கோடானு கோடி மக்களின் இதயங்களில் வாழும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தோன்றியதால் பெருமை பெற்ற திருவாரூர், கலைஞர் அவர்களாலேயே திருவாரூர் மாவட்டமாக உருவாக்கப்பட்டதால் மேலும் சிறப்புற்றது.

கல்லூரிகள், கட்டமைப்பு வசதிகள், ஓடாத ஆழிதேரை ஓடவைத்த பெருமை, அந்த தேரோட கான்கிரீட் சாலைகள், அதில் புதைவட மின் பாதைகள் அமைத்த சிறப்பு, பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் வளாகம், நீதிமன்ற வளாகம், அனைத்து வசதிகளுடனான மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மத்திய பல்கலைக் கழகம் இப்படி திருவாரூரை உலக அரங்கில் அடையாளப்படுத்தி, காட்டூரில் கலைஞர் கோட்டமாக உயர்ந்து நிற்கும் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவாரூரில் திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

### கம்பீரமான கலைஞர் சிலை!

திருவாரூருக்கு மட்டுமல்ல; முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை, அதன் அமைப்பால், சுற்றி எழுப்பப்படும் மணி மண்டபத்தால், உயர்ந்தோங்கி நிற்கும் கம்பீரத்தால், உலகிற்கு திருவாரூரை அடையாளப்படுத்திய கலைஞர் அவர்களின் சிலையானது, ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கே அடையாளமாக உயர்ந்து நிற்கப்போகும் அந்த பிரமாண்ட சிலையினை, திராவிட நாயகர், முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (09.07.2025) திறந்து வைக்கிறார்.

நாளை (10.07.2025) நடைபெறும் அரசு நிகழ்சிகளில் பங்கெடுக்கும் முதல்வர் அவர்கள் பல்வேறு முடிவடைந்த அரசு கட்டிடங்களை திறந்து வைத்து பின்னர் மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரையாற்றுகிறார்.

விழாவில் கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், தலைமைக் கழக நிர்வாகிகளும், மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் பெருந்திரளாக பங்கேற்கின்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம் – கீழ்புத்துப்பட்டு, திருப்பூர் மாவட்டம் – திருமூர்த்தி நகர், சேலம் மாவட்டம் – தம்மம்பட்டி, தருமபுரி மாவட்டம் – நாகாவதி அணை மற்றும் கேசர்குளி அணை, விருதுநகர் மாவட்டம் – கண்டியாபுரம் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 38 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 729 வீடுகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொதுத்துறை சிறப்பு செயலாளர் சஜ்ஜன்சிங் ரா. சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில்

# ரூ.38.76 கோடியில் 729 வீடுகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 9 -**

**விழுப்புரம், திருப்பூர், சேலம், தருமபுரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் ரூ.38.76 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 729 வீடுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.7.2025) தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம் - கீழ்புத்துப்பட்டு, திருப்பூர் மாவட்டம் - திருமூர்த்தி நகர், சேலம் மாவட்டம் - தம்மம்பட்டி, தருமபுரி மாவட்டம் - நாகாவதி அணை மற்றும் கேசர்குளி அணை, விருதுநகர் மாவட்டம் - கண்டியாபுரம் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் களில் 38 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 729 வீடுகளை திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்களால் கடந்த 27.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் என்று அறிவித்ததுடன், இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று பெயர் மாற்றம் செய்தும் அறிவித்தார்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர பணக்கொடை, துணிமணிகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் என அறிவித்ததுடன், இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் எனவும் அறிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், முதலமைச்சர் அவர்கள் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7469 வீடு களுக்கு மாற்றாக புதிய வீடுகள் கட்டித்தரப்படும் எனவும் அறிவித்தார். அதன்படி 26 மாவட்டங்களில் உள்ள 67 முகாம்களில் 7469 புதிய வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

இதில் முதற்கட்டமாக 3510 புதிய வீடுகள் 180 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் 19 மாவட்டங்களில் உள்ள 35 முகாம்களில் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டு, இவற்றில், ஏற்கனவே 18 மாவட்டங்களில் உள்ள 32 முகாம்களில் கட்டி முடிக்கப்பட்ட 2781 புதிய வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, விழுப்புரம் மாவட்டம் - கீழ்புத்துப்பட்டு, திருப்பூர் மாவட்டம் - திருமூர்த்தி நகர், சேலம் மாவட்டம் - தம்மம்பட்டி, தருமபுரி மாவட்டம் - நாகாவதி அணை மற்றும் கேசர்குளி அணை, விருதுநகர் மாவட்டம் - கண்டியாபுரம் ஆகிய ஆறு இடங்களில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 38 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 729 வீடுகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், மேற்கண்ட இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள், மின்சார வசதி, கழிவுநீர் கால்வாய், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளும் செய்துதரப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொதுத்துறை சிறப்பு செயலாளர் சஜ்ஜன்சிங் ரா. சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

